

Voice of Jagadguru

advaitam paramanandam



an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

வர்தந்தி
சிறப்பு இதழ்

ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் ஸ்ரீசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ விதுசேகரபாரதீ மஹாஸ்வாமிகளின் 32ஆவது வர்தந்தி மஹோ உற்ஸவம்

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

ஒருவனுடைய பந்தத்திற்கும், மோக்ஷத்திற்கும் காரணமாக அமைவது அவனுடைய மனம் தான். லௌகிக விஷயங்களில் பற்று வைப்பது பந்தத்திற்கும், பரமேச்வரனிடம் பற்றுதல் வைப்பது மோக்ஷத்திற்கும் காரணமாகிறது.

चेतः खल्वस्य बन्धाय मुक्तये चान्मनो मतम् ।
गुणेषु सक्तं बन्धाय रतं या पुंसि मुक्कमे ।।
சேத: க²ல்வஸ்ய ப³ந்தா⁴ய முக்தயே சான்மனோ மதம் .
கு³ணேஷு ஸக்தம்' ப³ந்தா⁴ய ரதம்' யா பும்'ஸி முக்கமே ..

மனிதன் ஒரு பொருளைப் பார்க்கும்பொழுது அதனிடத்தில் அவனுக்கு ஆசை உண்டாகிறது. அது பேராசையாக மாறுகிறது. அந்தப் பொருளை உடனே அடைவதற்கு அவன் முயற்சி செய்கிறான். சரியான வழியில் அதை அடைய முடியவில்லை என்றால் தவறான வழியில் அடைய முயற்சிக்கிறான். இவற்றிற்கு வசப்பட்ட மனிதனின் கதி அதோ கதியாகிவிடுகிறது. மனிதன் தான் செய்த கர்மத்திற்கேற்றவாறு பலனை அடைகிறான். அவ்வாறு அடையும் பலன் அவனை மீண்டும் முயற்சி செய்யத் தூண்டுகிறது. இவ்வாறு இந்தச் சக்கரத்தில் மனிதன் மாட்டிக்கொண்டு விடுகிறான். இந்த பந்தத்திலிருந்து விடுதலை பெறுவது தான் மோக்ஷம் என்று கூறப்படுகிறது. மனதை அடக்கி ஈச்வரனின் மேல் பற்றை வளர்ப்பதால் தான் அது ஸித்திக்கும்.

अत एव शनैश्चित्तं प्रसक्तमसतां पथि ।
भक्ति योगेन तीव्रेण विरक्त्या च नयेद्वशम् ।।
அத ஏவ ஶனைஶ்சித்தம்' ப்ரஸக்தமஸதாம்' பதி² .
ப⁴க்தி யோகே³ன தீவ்ரேண விரக்த்யா ச நயேத்³வஶம் ..

அதாவது, இந்த்ரியங்களின் வசப்பட்டு தீய வழியில் சென்ற மனதை தீவ்ரமான பக்தி யோகத்தாலும், வைராக்யத்தாலும் மெல்ல மெல்ல தன் வசத்தில் கொண்டு வரவேண்டும். கடவுள்: மேல் பற்றுதல் என்றால் அவர் மேல் பக்தி, அன்பு, ச்ரத்தை, அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க வேண்டும். இதனால் மனம் சுத்தமடைந்து கடவுளில் லயமாகிறது. ஆகையால் மனிதன் கடவுள் பக்தியைப் ப்ரதானமாக ஏற்றுக்கொண்டு தனக்கு விதிக்கப்பட்டுள்ள கர்மாக்களை

ஈச்வரார்ப்பண புத்தியோடு செய்து வந்தால் கடவுளின் ப்ரீதிக்குக் காரணமாகிவிடுவான். இதுதான் ச்ரேயோ மார்கம்.

நன்றி - அம்மன் தரிசனம்

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அம்ருத துளிகள்

மனிதன் க்ஷேமம் அடைவதற்கு தர்மத்துக்கு உயர்ந்த இடம் உண்டு. சகல தர்மங்களிலும் உத்தமமான தானம் ஒருவருக்கு ஏதோ ஒன்றை மகிழ்ச்சியுடன் கைமாறு எதுவும் எதிர்பார்க்காமல் கொடுப்பது.

ஸாத்விக, ராஜஸிக, தாமஸிக என்று மூன்று வகையான தானங்களில் தகுதியுள்ள மனிதனுக்கு சரியான சமயத்தில், தகுந்த இடத்தில், கொடுப்பது ஸாத்விக தானம். இஷ்டமில்லாமலும் கைமாறு எதிர்பார்த்தும் கொடுப்பது ராஜஸிக தானம். பண்பற்று தாழ்வுபடுத்தும் முறையில் சமயம் இடம் பெறுபவன் தன்மை எல்லாவற்றையும் லக்ஷியம் செய்யாமல் கொடுப்பது தாமஸிக தானம். ஸாத்விகதானம்தான் கொடுக்கப்பட வேண்டும். மற்ற தானங்கள் நிஷித்தம் (பயனற்றது). தானங்களில் வித்யா தானம் உண்மையில் பெரியது. குரு வித்யயை கொடுப்பதால் மிகவும் மதிப்புக்குரியவர்.

தானமாக கொடுத்த வஸ்துக்கள் உபயோகத்தில் கரைந்து விடுகின்றன. தானம் அளித்த வித்தை அப்படிப்பட்டதல்ல. அது மேலும் வளரும். ஆதலால் தன்னிடம் எள்ளளவில் உள்ள வித்தையை சுலபமாக மற்றவர்களுக்கு அளிக்கலாம். இதுவும் சத்காரியமாகும்.

ஆதிசங்கரர் போன்ற ஞானிகள் உலகத்துக்கு ஞானத்தை தானம் அளித்து அழியாத கீர்த்தி பெற்றிருக்கிறார்கள். அதே மாதிரி பண்டைய காலத்து அரசர்கள் பக்தர்களுக்கும் ஏழைகளுக்கும் விசேஷ இனாம்களை கொடுத்து புகழ் அடைந்து இருக்கிறார்கள். தன் சக்திக்கேற்ப தானம் அளித்து எல்லோரும் கீர்த்தி பெறட்டும். பாவத்திலிருந்து நரகமும், ஏழ்மையிலிருந்து பாவமும் தானமின்மையிலிருந்து ஏழ்மையும் உண்டாகின்றன. ஆதலால் எல்லோரும் தானம் கொடுக்க வேண்டும்.

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள்

நிர்மமோ நிரஹங்கார:

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

மனிதனுக்கு, தான் சிறியதொரு நற்காரியம் செய்தாலும்கூட “நான் செய்தேன்” என்று அஹங்காரம் வரும். அந்த அஹங்காரம் நிறைய தவறுகளுக்குக் காரணமாக அமைந்துவிடும். “நான் தவறு செய்தால் என்னை யார் கேட்பார்கள்? எனக்கு எல்லாம் தெரியும், எனக்கு எது இஷ்டமோ நான் அதைச் செய்வேன்” என்கிற ஒரு மனோபாவத்தை அஹங்காரம் ஏற்படுத்துகிறது. இத்தகைய மனோபாவம் எல்லாத் தீமைகளுக்கும் அடிப்படையாகும். எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்பவனைவிட நிறையத் தெரிந்தவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். எனக்கு நிறைய சக்தி இருக்கிறது என்று சொல்பவனைவிடச் சக்தி வாய்ந்தவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். இந்த உண்மையெல்லாம் அஹங்காரம் உள்ளவர்களுக்குத் தெரியாது. மேலும் நாங்கள் செய்கின்ற தீய செயல்களை யாரும் பார்ப்பதில்லை என்று வேறு நினைத்துக் கொள்கிறார்கள். நம்முடைய செயல்களை யாரும் பார்ப்பதில்லை என்று நினைப்பது தவறு. நாமும் நமது தவறான செயல்களை யாரும் பார்ப்பதில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

மனிதன் செய்யும் காரியங்களை பஞ்சமஹாபூதங்களான பிருத்வீ, தேஜஸ், ஜலம், வாயு, ஆகாசம், சூரிய சந்திரர்கள், ஸந்தியா காலம், மனதினுள்ளிருக்கும் அந்தர்யாமியான பரமாத்மா – இவ்வளவு பேர் பார்த்துக் கொண்டிருக்கும்போது யாரும் பார்க்கவில்லை என்று சொல்வது முறையா? இத்தகைய பேச்சு நமக்கு வருவதற்கு நம்மிடமுள்ள அஹங்காரம்தான் காரணம். அஹங்காரம்தான் தவறுகள் பல நடப்பதற்கும் காரணம். ஆகவே அஹங்காரம் இருக்கக் கூடாது.

For free Copies please mail us. Our Mail ID : Info@voiceofjagadguru.com

|| श्रीः ||

|| षट्पदीस्तोत्रम् ||

.. ஷட்பதீ³ஸ்தோத்ரம் ..

[ஷட்பதீ ஸ்தோத்திரம் ஏழு சுலோகங்கள் கொண்டது- முதல் சுலோகத்தில் தன்னிடமுள்ள அவிநயம், ஆசை இவற்றைப் போக்கி, மனதை அடங்கச் செய்து பூததயை ஏற்படச் செய்து பிறவிக்கடலிலிருந்து அக்கரை சேர்க்கும்படி பிரார்த்தித்து, இரண்டாவதில் பகவச் சரணங்களை வணங்குகிறார். 3-வதில்

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸமுத்ர த்ருஷ்டாந்தத்தால் தான் பகவத் சேவகன் என்பதை உறுதிப்படுத்தி 4, 5, 6 சுலோகங்களில் பகவானுடைய பெருமைகளையும் லோகரக்ஷணத்தையும் காட்டி, தன் பயத்தையும் துன்பத்தையும் போக்கும்படி வேண்டிக்கொண்டு கடைசி சுலோகத்தில் பகவச் சரணார விந்தத்தில் சரணம் செய்கிறார். இதில் காட்டியுள்ள மந்திரத்தை அநுஸந்தானம் செய்தால் நிச்சயம் பகவதனுக்ரஹம் பெறலாம்.]

अविनयमपनय विष्णो दमय मनः शमय विषयमृगतृष्णाम् ।
भूतदयां विस्तारय तारय संसारसागरतः ॥ १ ॥

அவினயமபனய விஷ்ணோ த³த்³மய மனঃ ஶமய விஷயம்ருʼக³த்ருʼஷ்ணாம் .
பூ⁴தத³யாம்ʼ விஸ்தாரய தாரய ஸம்ʼஸாரஸாக³ரதঃ .. 1 ..

विष्णो {விஷ்ணோ} = விஷ்ணுவே; अविनयं {அவினயம்} = (என்) அஹங்காரத்தை; अपनय {அபனய} = போக்குங்கள்; मनः {மனঃ} = (என்) மனதை; दमय {த³மய} = அடங்கும்படி செய்யுங்கள்; विषयमृगतृष्णाम् {விஷயம்ருʼக³த்ருʼஷ்ணாம்} = விஷயங்களிலுள்ள ஆசையை; शमय {ஶமய} = போக்குங்கள்; भूतदयां {பூ⁴தத³யாம்ʼ} = பிராணிகளின் பேரில் இரக்கத்தை: विस्तारय {பூ⁴தத³யாம்ʼ} = பெருகும் படி செய்யுங்கள் ; संसारसागरतः {ஸம்ʼஸாரஸாக³ரதঃ} = பிறவிக்கடலிலிருந்து; तारय {தாரய} = கடைத்தேறச் செய்யுங்கள்.

எங்கும் நிறைந்து எல்லா வல்லமையும் பொருந்தி எல்லோருடைய மனத்திலும் விளங்கும் ஹே விஷ்ணுவே, திரும்பித் திரும்பி பிறப்பதும் சாவதுமாகிய இந்த ஸம்ஸார ஸாகரத்தில் அகப்பட்டுத் தத்தளிக்கும் என்னை அக்கரை சேர்க்கவேண்டும். இதற்கு இடைஞ்சலாக என்னிடம் இருக்கும் எல்லா தோஷங்களையும் தாங்கள் தான் போக்கியருளவேண்டும். விஷயங்களிலுள்ள ஆசையைப் போக்கி, மனதை அடங்கச்செய்து, அஹங்காரத்தையும் போக்க வேண்டும். எல்லா பிராணிகளிடமும் தாங்கள் இருப்பது தெரிந்து என் மனதில் இரக்கம் உண்டாகும்படி செய்ய வேண்டும். விஷயங்களில் ஆசை, அதனால் மனம் எங்கும் அலைவது, அஹங்காரம், மற்றவரை அவமதிப்பது இவையே எல்லாத் துன்பங்களுக்கும் காரணம். இவற்றை நீக்கும்படி பகவானை வேண்டுகிறார். ஸர்வசக்தராக என் மனதில் வஸிக்கும் தங்களுக்குத்தான் இந்தத் திறமை உண்டு என்பதை 'विष्णो' என்ற ஸம்போ தனத்தால் காட்டுகிறார். (1)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

दिव्यधुनीमकरन्दे परिमलपरिभोगसच्चिदानन्दे ।
श्रीपतिपदारविन्दे भवभयखेदच्छिदे वन्दे ॥ २ ॥
தி³வ்யது⁴னீமகரந்தே³ பரிமலபரிபோ⁴க³ஸச்சிதா³னந்தே³ .
ஶ்ரீபதிபதா³ரவிந்தே³ ப⁴வப⁴யகே²த³ச்சி²தே³ வந்தே³ .. 2 ..

दिव्यधुनीमकरन्दे {தி³வ்யது⁴னீமகரந்தே³} = ஆகாசகங்கையை மகரந்தமாகக் (புஷ்பரஸமாக) கொண்டவைகளும்; परिमलपरिभोगसच्चिदानन्दे {பரிமலபரிபோ⁴க³ஸச்சிதா³னந்தே³} = தானந்தத்தை வாஸனையாகக் கொண்டவைகளும்; भवभयखेदच्छिदे {ப⁴வப⁴யகே²த³ச்சி²தே³} = ஸம்ஸார பயத்தாலுண்டாகும் துன்பத்தை அழிக்கின்றவைகளுமான: श्रीपतिपदारविन्दे {ஶ்ரீபதிபதா³ரவிந்தே³} = லெக்ஷ்மீபதியின் இரு சரணாரவிந்தங்களையும்; वन्दे {வந்தே³} = வணங்குகிறேன்.

ஆகாச கங்கையை மகரந்தமாகக் கொண்டவைகளும் ஸச்சிதானந்த ஸ்வரூபத்தை வாஸனையாகக் கொண்டவைகளும் ஸம்ஸார பயத்தால் உண்டாகும் துன்பத்தை அழிக்கின்றவைகளுமான லெக்ஷ்மீபதியின் இரு சரணார விந்தங்களையும் வணங்குகிறேன்.

தான் என்ற அஹங்காரமும், என்னுடையது என்ற மமகாரமும் இருக்கும்வரை மனம் அடங்காது. விஷயங்களில் ஆசை குறையாது. சுயநலத்தையே மேலானதாக எண்ணுபவனுக்கு பிராணிகளிடம் இரக்கமும் ஏற்படாது. இந்த அஹங்கார மமகாரங்களை நீக்கும்படி முதல் சுலோகத்தில் வேண்டினார். இதற்காகவே தன் நிலையை மறந்து அபிமானத்தை விட்டு இந்த சுலோகத்தில் பகவச் சரணார விந்தத்தை வணங்குகிறார். கங்கைதான் பகவானின் திருவடித் தாமரையிலிருந்து பெருகும் மகரந்தம். சச்சிதானந்த ஸ்வரூபம் தான் அதிலிருந்து கிளம்பி எங்கும் பரவிவரும் பரிமளம். இந்த சரணாரவிந்தமே ஸம்ஸார பயத்தையும் துன்பத்தையும் போக்கவல்லது. (2)

सत्यपि भेदापगमे नाथ तवाहं न मामकीनस्त्वम् ।
सामुद्रो हि तरङ्गः क्वचन समुद्रो न तारङ्गः ॥ ३ ॥
ஸத்யபி பே⁴தா³பக³மே நாத² தவாஹம்’ ந மாமகீனஸ்த்வம் .
ஸாமுத்³ரோ ஹி தரங்க³: க்வசன ஸமுத்³ரோ ந தாரங்க³: .. 3 ..

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

नाथ {நாத²} = ரக்ஷகனே; भेदापगमे सत्यपि பே⁴தா³பக³மே ஸத்யபி} = வேற்றுமை நீங்கிய போதிலும்; अहं {அஹம்'} = நான்; तव {தவ} = உங்களுடையவன்; त्वं {த்வம்'} = நீர், न मामकीन**:** {ந மாமகீன:} = என்னுடையவரல்ல; तरङ्गो हि {தரங்கோ³ ஹி} = அலையல்லவா; सामुद्र**:** {ஸாமுத்³ர:} = ஸமுத்திரத்தைச் சேர்ந்தது; क्वचन {க்வசன} = ஒரு இடத்திலும்; समुद्र**:** {ஸமுத்³ர:} = ஸமுத்திரம்; न तारङ्गः {ந தாரங்க³:} = அலையைச் சேர்ந்ததாக இருப்பதில்லை.

ரக்ஷகனே, வேற்றுமை நீங்கியபோதிலும் நான் தான் உங்களுடையவன். நீங்கள் என்னுடையவரல்ல. அலை தான் ஸமுத்திரத்தினுடையதாய் இருக்குமே தவிற ஒரு இடத்திலாவது ஸமுத்திரம் அலையைச் சேர்ந்ததாக இருப்பதில்லை.

தான் எப்பொழுதும் பக்தன், ஸேவகன் தான் என்பதை உறுதிப்படுத்திக் கூறுகிறார். உண்மையில் உம் ஸ்வரூபமும் என் ஸ்வரூபமும் ஒன்றுதான். ஒரே ஸச்சிதானந்த வஸ்து ஆனாலும் நீர் நித்யமுக்தர். பெரும் தீயிலிருந்து சிறு நெருப்புப்பொறி கிளம்புவது போல் நான் உம்மிடமிருந்து கிளம்பியுள்ளேன். மாயையால் அல்லற்படுகிறவன். உம் கருணையால் உம் ஸ்வரூபத்தை அடையப்போகிறேன். ஆகையால் அல்பனான நான் எப்பொழுதும் மஹானான உம்முடையவன் தான். நீர் என்னுடையவர் என்பது இல்லை. ஸமுத்திரத்திலிருந்து கிளம்பும் அலை ஜலஸ்வரூபமாக இருந்து உண்மையில் கடலைக்காட்டிலும் வேறாக இல்லாமலிருந்தாலும் ஸமுத்திரத்தைச் சேர்ந்தது அலை என்று சொல்கிறார்களே தவிற, அலையைச் சோந்தது ஸமுத்திரம் என்று ஒருவரும் சொல்வதில்லை. (3)

उद्धृतनग नगभिदनुज दनुज कुलामित्र मित्रशशिदृष्टे ।
दृष्टे भवति प्रभवति न भवति किं भवतिरस्कारः ॥ ४ ॥
உத்³த்⁴ரு'தனக³ நக³பி⁴த³னுஜ த³னுஜ குலாமித்ர மித்ரஶஶித்³ரு'ஷ்டே .
த்³ரு'ஷ்டே ப⁴வதி ப்ரப⁴வதி ந ப⁴வதி கிம்' ப⁴வதிரஸ்கார: .. 4 ..

उद्धृतनग {உத்³த்⁴ரு'தனக³} = மலையை தூக்கியவரே; नगभिदनुज {நக³பி⁴த³னுஜ} = மலைகளின் சிறகை வெட்டிய தேவேந்திரனின் தம்பியே; दनुज कुलामित्र {த³னுஜ குலாமித்ர} = அஸுரக் கூட்டத்திற்கு சத்ருவே; मित्रशशिदृष्टे {மித்ரஶஶித்³ரு'ஷ்டே} = ஸூரியனையும், சந்திரனையும் கண்களாகக்கொண்டவரே; प्रभवति {ப்ரப⁴வதி} = மிகுந்த செல்வாக்குள்ள; भवति {ப⁴வதி} = நீர்; दृष्टे {த்³ரு'ஷ்டே} = பார்க்கப் பட்டுவிட்டால்;भवतिरस्कारः {ப⁴வதிரஸ்கார:} = ஸம்ஸாரத்தின் நிவிருத்தி; किं न भवति {கிம் ந ப⁴வதி} = ஏற்படாதா?

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

கோவர்த்தன மலையைத் தூக்கி ஒரு கையில் குடையாகப் பிடித்து நின்றுகொண்டு பெரும் மழையிலிருந்து கோகுலத்தைக் காப்பாற்றியவர். உலகத்துக்கே தீங்கு விளைவித்த மலைகளின் சிறகை வெட்டிக் காப்பாற்றிய த்ரிலோகாதிபதியான தேவேந்திரனின் தம்பியான உபேந்திரனல்லவா தாங்கள். துஷ்ட அஸுரகுலத்தையே அழிப்பவர். உலகிற்கே பிரகாசத்தைக் கொடுக்கும் ஸூர்ய சந்திரர்கள் உமக்கு நேத்ரமாக விளங்குகிறார்கள். चन्द्रसूर्यौ च नेत्रे உலகிற்கே தாங்கள் தான் பிரபு. இத்தனை வல்லமையுள்ள உம்மைத் தெரிந்துகொண்டு விட்டால் என் பிறவித்துன்பம் ஏன் விலகாது? கட்டாயம் நீங்கிவிடும்.(4)

मत्स्यादिभिरवतारैरवतारवतावता सदा वसुधाम् ।
परमेश्वर परिपाल्यो भवता भवतापभीतोऽहम् ॥ ५ ॥
மத்ஸ்யாதி³பி⁴ரவதாரைரவதாரவதாவதா ஸதா³ வஸுதா⁴ம் .
பரமேஸ்வர பரிபால்யோ ப⁴வதா ப⁴வதாபபீ⁴தோ(அ)ஹம் .. 5 ..

परमेश्वर {பரமேஶ்வர} = பரமேசுவரனே !; मत्स्यादिभि: {மத்ஸ்யாதி³பி⁴:} = மத்ஸ்யம் முதலான; अवतारै: {அவதாரை:} = அவதாரங்களால்; अवतारवता {அவதாரவதா} = அவதாரங்களுடன் கூடியவரும்; सदा {ஸதா³} = எப்பொழுதும்; वसुधाम् {வஸுதா⁴ம்} = பூமியை; अवता {அவதா} = காப்பாற்றுகின்றவருமான ; भवता {ப⁴வதா} = உம்மால்; भवतापभीत: {ப⁴வதாபபீ⁴த:} = ஸம்ஸார தாபத்திலிருந்து பயமடைந்த; अहं {அஹம்} = நான்; परिपाल्य: {பரிபால்ய:} = காப்பாற்றத்தகுந்தவன்.

துஷ்டர்களால் உலகிற்குத் துன்பம் ஏற்படும் போதெல்லாம் துஷ்டர்களை சிக்ஷிக்கவும் ஸாதுக்களைக் காப்பாற்றவும் மத்ஸ்யம் முதலான அவதாரங்களை எடுத்து, அதாவது பிறப்பே இல்லாத தாங்கள் மீன், ஆமை முதலான தாழ்ந்த பிறவிகளையும் கூட எடுத்து உலகைக் காப்பாற்றியிருக்கிறீர்கள் தாங்கள் தான் பரமேச்வரன். உலகையெல்லாம் அடக்கியாண்டு காப்பாற்றுகிறவர். ஸம்ஸார தாபத்திலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டியதும் உம்முடைய பொறுப்புத் தான். ஆனால் அம்மாதிரியான அவதாரம் ஒன்றும் எடுக்காமலேயே ஸுலபமாக என் பயத்தை நீக்கி என்னைக் காப்பாற்றிவிடலாம். (5)

दामोदर गुणमन्दिर सुन्दरवदनारविन्द गोविन्द ।

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

भवजलधिमथनमन्दर परमं दरमपनय त्वं मे ॥ ६ ॥
தா³மோத³ர கு³ணமந்தி³ர ஸுந்த³ரவத³னாரவிந்த³ கோ³விந்த³ .
ப⁴வஜலதி⁴மத²னமந்த³ர பரமம்' த³ரமபனய த்வம்' மே .. 6 ..

दामोदर {தா³மோத³ர} = கயிற்றால் வயிற்றில் கட்டுண்டவனே; गुणमन्दिर {கு³ணமந்தி³ர} = நற்குணங்களுக்கு இருப்பிடமானவனே; सुन्दरवदनारविन्द {ஸுந்த³ரவத³னாரவிந்த³} = அழகிய தாமரைபோன்ற முகமுள்ளவரே; गोविन्द {கோ³விந்த³} = கோவிந்த !; भवजलधि {ப⁴வஜலதி⁴} = ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தை; मथन {மத²ன} = கலக்குவதில்; मन्दर {மந்த³ர} = மந்தரமலை போன்றவரே; मे {மே} = என்னுடைய; परमं {பரமம்} = மிகுந்த; दरं {த³ரம்} = பயத்தை; त्वं {த்வம்} = நீர்; अपनय {அபனய} = போக்கும்.

தாயான யசோதையால் உரலுடன் சேர்த்து கயிற்றால் தாம் கட்டப்பட்டு நளகூபரன், மணிக்ரீவன் என்ற இரு யக்ஷர்களின் துன்பத்தைப் போக்கினீர். எல்லா நற்குணங்களும் தங்களிடமே கூடியிருக்கின்றன. தங்களுக்கு பயம், துன்பம் முதலியவை ஒருபொழுதும் இல்லாததால் தங்கள் வதனம் எப்பொழுதும் தாமரைபோல அழகாகவும் பொலிவுடனும் விளங்குகிறது. பசுக்களின் துன்பத்தைப் போக்கி கோவிந்தன் என்ற பெயர் கொண்டவர். வேதங்களால் அறியத்தக்கவர். மந்தரமலை கடலைக் கலக்கியதுபோல ஸம்ஸாரஸாகரத்தை அடியுடன் கலக்கி அதனால் உண்டாகும் துன்பத்தைப் போக்குபவர். பிறவியால் ஏற்படும் பயத்தைப் போக்கி அருளவேண்டும். (6)

नारायण करुणामय शरणं करवाणि तावकौ चरणौ ।
इति षट्पदी मदीये वदनसरोजे सदा वसतु ॥ ७ ॥
நாராயண கருணாமய ஶரணம்' கரவாணி தாவகௌ சரணௌ .
இதி ஷட்பதீ³ மதீ³யே வத³னஸரோஜே ஸதா³ வஸது .. 7 ..

नारायण {நாராயண} = நாராயணனே; करुणामय {கருணாமய} = கருணையே உருக் கொண்டவனே; तावकौ {தாவகௌ} = உம்முடைய; चरणौ {சரணௌ} = இருபாதங்களை; शरणं करवाणि {ஶரணம்' கரவாணி} = சரணம் அடைகிறேன்; इति {இதி} = என்ற; षट्पदी {ஷட்பதீ³} = ஆறு பாதங்களின் கூட்டம்; मदीये {மதீ³யே} = என்னுடையதான; वदनसरोजे {வத³னஸரோஜே} = தாமரை போன்ற முகத்தில்; सदा {ஸதா³} = எப்பொழுதும்; वसतु {வஸது} = வாஸம் செய்யட்டும்.

நாராயணா, கருணையே உருக்கொண்டவனே, உம் இரு சரணங்களையும் சரணம் அடைகிறேன். (1) நாராயண (2) கருணாமய (3) சரணம் (4) கரவாணி (5)

தாவகௌ (6) சரணௌ என்ற இந்த ஆறு பதங்கள் சேர்ந்த வாக்யம் எப்பொழுதும் என் முகத்தில் விளங்கட்டும். இந்த சுலோகத்தில் ஆறு பதங்கள் கொண்ட பூர்வார்த்தம் (முன் பாதி) ஓர் மஹாமந்திரம். இதை எப்பொழுதும் என் வாய் சொல்லிக் கொண்டிருக்கட்டும். ஆறு கால்களுள்ள வண்டிற்கு ஷட்பதீ என்று பெயர். அது எப்பொழுதும் தாமரைப் பூவில் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும். அதுபோல் ஆறு பதங்களுள்ள இந்த மஹாமந்திர ரூபமான ஷட்பதியும் என் முகத்தாமரையில் எப்பொழுதும் விளங்கிக் கொண்டிருக்கட்டும். அப்பொழுது தான் அந்த முகம் சோபையுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் ஆகும். (7)

ஷட்பதீ ஸ்தோத்ரம் முற்றும்.

॥ श्रीः ॥

॥ श्री कृष्णाष्टकम् ॥

ஸ்ரீ கிருஷ்ணாஷ்டகம்

(ஸ்ரீ க்ருஷ்ணாஷ்டகம் எட்டு சுலோகங்கள்கொண்டது. ஒவ்வொரு சுலோகத்தின் நான்காவது பாதத்திலும், ஒரே மாதிரியாக "ஸர்வலோகநாயகனாயும், புகலிடமாயும் உள்ள கிருஷ்ணன், நான் பார்க்கும்படியாக என் கண் எதிரில் தோன்றட்டும்" என்று பிரார்த்திக்கிறார். இதில் கிருஷ்ணனை

நந்தகுமாரனாகமட்டும் வர்ணிக்கவில்லை. உபநிஷத்துக்களில் கூறியபடி ஸகுண ஈசுவரனாகவும், நிர்குணமான பரப்ரஹ்மமாகவும் வர்ணிக்கிறார். ஆகையால் கோபால உருவத்துடன் கண்முன் தோன்றி ஆனந்தத்தைத் தருவதுடன், என் ஞானத்திற்கும் விஷயமாக வேண்டும். அதாவது வேதாந்த ப்ரதிபாத்யமான உம் பரதத்வத்தை நான் நன்கு அறிந்து பேரானந்தத்தை அடையவேண்டுமென்றும் வேண்டுகிறார். முதல் சுலோகத்தில் வைகுண்டவாளியான ஸ்ரீமந் நாராயணனாக வர்ணித்துவிட்டு, அவரே ஸிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாவான ஈசுவரன் என்று இரண்டாவது சுலோகத்தில் கூறுகிறார். மூன்றாவது சுலோகத்தில் அஷ்டாங்கயோகத்தால் ஈசுவர தர்சனம் ஏற்படுவதைக் கூறிவிட்டு, நான்காவது சுலோகத்தில் பிருஹதாரண்யக உபநிஷத்தில் கூறப்பட்டுள்ள அந்தர்யாமி ஸ்ரீ கிருஷ்ணனே

என்பதையும், ஐந்தாவது சுலோகத்தில் கேனோபநிஷத்தில் தேவர்களுக்கு முன்னால் தோன்றியதாகக் கூறப்பட்டுள்ள யக்ஷமும் கிருஷ்ணர் தான் என்பதையும் கூறுகிறார். ஆறாவது சுலோகத்தில் கிருஷ்ணத்யானம், ஸ்மரணம், ஞானம் இவை இல்லாவிடில் கீழ்ப்பிறவியை அடைவான் என்பதைக் கூறி 7, 8-வது சுலோகங்களில் அவதார கார்யங்களைக் கூறுகிறார்.)

(அ) கிருஷ்ணன் நாராயணன் தான் என்பதைக்காட்டி, அவரைத் தன் கண்ணால் பார்க்கும்படி அருளவேண்டுமென ப்ரார்த்திக்கிறார்:-

श्रियाश्लिष्टो विष्णुः स्थिरचरगुरुर्वेदविषयो धियां साक्षी शुद्धो हरिरसुरहन्ताऽब्जनयनः ।
गदी शङ्खी चक्री विमलवनमाली स्थिररुचिः शरण्यो लोकेशो मम भवतु कृष्णोऽक्षिविषयः ॥ १ ॥

ஶ்ரியாஶ்லிஷ்டோ விஷ்ணுঃ
ஸ்தி²ரசரகு³ருர்வேத³விஷயோ தி⁴யாம்’ ஸாக்ஷீ ஶுத்³தோ⁴
ஹரிரஸுரஹந்தா(அ)ப்³ஜநயனঃ .
க³தீ³ ஶங்கீ² சக்ரீ விமலவனமாலீ ஸ்தி²ரருசிঃ ஶரண்யோ லோகேஶோ மம ப⁴வது
க்ரு’ஷ்ணோ(அ)க்ஷிவிஷயঃ .. 1 ..

श्रिया {ஶ்ரியா} = லக்ஷ்மீதேவியால்; आश्लिष्ट: {ஆஶ்லிஷ்ட:} = ஆலிங்கனம் செய்து கொள்ளப்பட்டவரும்; विष्णुः {விஷ்ணு:} = எங்கும் இருப்பவரும்; स्थिरचरगुरु: {ஸ்தி²ரசரகு³ரு:} = ஸ்தாவரமும் ஜங்கமமுமான பிராணிகளுக்கு குருவாயும்; वेदविषय: {வேத³விஷய:} = வேத த்தால் விளக்கத்தக்கவரும்; धियां {தி⁴யாம்} = புத்தி வ்ருத்திகளுக்கு; साक्षी {ஸாக்ஷீ} = ஸாக்ஷியாக இருப்பவரும்; शुद्ध: {ஶுத்³த⁴:} = நிர்மலரும்; हरि: {ஹரி:} = பாபங்களைப் போக்குகிறவரும்; असुरहन्ता {அஸுரஹந்தா} = அஸுரர்களைக் கொல்பவரும்; अब्जनयनः {அப்³ஜநயன:} = தாமரைபோன்ற கண்களுள்ள வரும்; गदी {க³தீ³} = கதையுடன் கூடிய வரும்; शंखी {ஶங்கீ²} = சங்கத்துடன் கூடிய வரும்; चक्री {சக்ரீ} = சக்கரத்துடன் கூடிய வரும்; विमलवनमाली {விமலவனமாலீ} = நிர்மலமான வனமாலையுடன் கூடிய வரும்; स्थिररुचिः {ஸ்தி²ரருசி:} = நிலையான காந்தியுள்ள வரும்; शरण्य: {ஶரண்ய:} = புகலிடமாக இருப்பவரும்; लोकेश: {லோகேஶ:} = எல்லா உலகங்களுக்கும் ஈசுவரனாயும் இருக்கும்; कृष्ण: {க்ரு’ஷ்ண:} = கிருஷ்ணன்; मम {மம} = என்னுடைய; अक्षिविषयः {அக்ஷிவிஷய:} = கண்களுக்கு கோசரராக; भवतु {ப⁴வது} = ஆகட்டும்.

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸ்ரீ கிருஷ்ணன் என் கண்ணால் பார்க்கும் படி என் எதிரில் வந்து நின்று தன் ரூபத்தை எனக்குக் காட்டியருள் செய்யவேண்டும். இவர் உலகிற்கு வஸுதேவ குமாரராகத் தோன்றிய போதிலும் இவர் ஸ்ரீமந் நாராயணன் தான் என்பதை நான் தெரிந்து கொண்டுள்ளேன். சங்கசக்ரகதா பாணியாயும் வநமாலா தரராயும் லக்ஷ்மியை மார்பில் கொண்டவரும் 'यथा कप्यासं पुण्डरीकं एवमक्षिणी' என்று சாந்தோக்ய உபநிஷத்தில் கூறியுள்ளபடி புண்டரீகாக்ஷனும் அப்போதைக்கப் போது பல அவதாரங்கள் செய்து துஷ்ட அஸுரர்களைக் கொல்வதுடன், ஸ்தாவரமாயும் ஜங்கமமாயும் உள்ள பிராணிகளுக்கு குருவாக இருந்து வழிகாட்டு பவருமான ஸ்ரீமந் நாராயணன் தான் கிருஷ்ணன்.இது மட்டுமா! உபநிஷத்துக்களால் விளக்கப்படுகின்ற ஸர்வ வியாபகமான மாயாதீதமான பரப்ரஹ்மமும் இவர் தான். எல்லோருடைய ஹிருதயத்திலுமிருந்து புத்தியில் ஏற்படும் ஞானங்கள் எல்லாவற்றையும் அதனுடன் ஸம்பந்தப்படாது அறிகின்ற ஸாக்ஷியும் இவர் தான். இங்கு தாமரையை பகவானுடைய கண்களுக்கு உபமானமாகக் கூறியுள்ள போதிலும் இரவில் தாமரைக்கு சோபை குறைவது போல் இவருடைய காந்தி ஒருபொழுதும் மங்குவதில்லை. அது நிலையானது. இந்தக் காந்தியால் தான் வனமாலை முதலியவைகளுக்கும் சோபை ஏற்படுகிறது. (1)

ஸத் ஸம்பிரதாயம் (உபாஸனா) இதழில் இதன் தொடர்ச்சியை பார்க்கவும்

For free Copies please mail us. Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்